RECEIVED
1980-3-9
PERIODICALS
DIVISION
UNIVERSITY ★ LIBRARY ★ CAMPUS

தரத்தில் நிகரற்ற
மான், முயல்,
விளக்கு, வரிக்குதிரை
செவனமார்க்
ஓடுகளுக்கு

மு. தா. பொன்னம்பலம்
36, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 8 ★

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 | மாசி 25 | ரபி–ஆகி 20 | இதழ் 27
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 8 3 80

### இந்திரா அமைச்சரவையில் மேலும் ஒருவர்

(புதுடில்லி)
இந்திய மந்திரிசபையில் மேலும் ஒருவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

முன்னாள் கர்நாடக மாநில முதல்வர் திரு. வீரேந்திர பாட்டீல் பெற்றோலிய அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். (கு)

## பிரிவினையை இன்று எதிர்ப்பவர்களின் முன்னோர்கள்

# யாழ்ப்பாண இராச்சியத்தை அன்று இலங்கையின் ஒருபகுதியாக ஏற்கவில்லை

## பாராளுமன்றத்தில் 'தர்மர்'

(கொழும்பு)
இந்த நாட்டைப்பிரிக்க விடமாட்டோம் என இன்று பிரிவினைக்கு எதிராகக் குரல் எழுப்புபவர்களின் முன்னோர்கள் அன்று யாழ்ப்பாண இராச்சியத்தை இலங்கையின் ஒருபகுதியாகஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் நாம் இழந்த இராச்சியத்தை இன்று மீட்டெடுக்க முயற்சிக்கும்போது அதற்கு எதிராகக் குரல் எழுப்புவது படுதுரோகமான செயல்.

இவ்வாறு மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவின் தனிநபர் பிரேரணை ஒன்றின் விவாதத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

வியாபார நோக்கத்திற்கா இலங்கைக்கு வந்த அந்நியர் முதலில் கோட்டை இராச்சியத்தையும் பின்னர் கண்டி இராச்சியத்தையும் கைப்பற்றினர். கண்டி இராச்சியத்தை அவர்கள் கைப்பற்றுவதைத் தடுக்க தமிழ் நாட்டிலிருந்து வந்த படைகளைக் கண்டிக்குச் செல்ல யாழ்ப்பாண மன்னன் அனுமதித்ததன் காரணத்தாலேயே யாழ்ப்பாண இராச்சியத்தையும் அவர்கள் கைப்பற்றினார்கள்.

ஆனால் இன்று பிரிவினைக்கு எதிராகக் கோஷம் எழுப்புபவர்களின் முன்னோர்கள் யாழ்ப்பாண இராச்சியம்கைப் பற்றப்பட்டபோது அதற்கு உதவ முன்வரவில்லை. யாழ்ப்பாண இராச்சியத்தை அவர்கள் இலங்கையின் ஒருபகுதியாக ஏற்றுக்கொள்ளாததே அதற்குக் காரணம்.

ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து இலங்கை, அரசியல் சுதந்திரம் பெற்றபொழுதிலும் பொருளாதார ரீதியில் இன்னமும் ஏகாதிபத்திய வாதிகளிடம் அடிபணியும்நிலையிலேயே இருக்கிறது

மேலைத்தேய ஏகாதிபத்திய வாதிகளின் ஏஜண்டுகளாகவே சர்வதேச வர்த்தகக் கம்பனிகள் 3-ம் உலக நாடுகளை சோஷலிஸப் பாதையில் செல்லவிடாது முதலாளித்துவ பாதையிலேயே இட்டுச்செல்கிறது. (ம-இ)

### இன்று

(வண்ணார்பண்ணை)
அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று நடைபெறுகின்றது.

## மத்யூவின் நடவடிக்கைகளை ஆராயத் தெரிவுக்குழு

### எதிர்க்கட்சிகள் முன்னறிவித்தல்

(கொழும்பு)
கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில்மத்தியூவின் நடவடிக்கைகள் குறித்து குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யப் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்ற பிரேரணைக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி சிறிமா பண்டாரநாயக்கா உட்பட சகல எதிர்க்கட்சி எம். பிக்களும்நேற்று பாராளுமன்றத்தில் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர். (ம-இ)

## மத்தியூவின்உரிமைப்பிரச்னை சபாநாயகர் நிராகரிப்பு

(கொழும்பு)
எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ, அமிர்தலிங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை சபையில் பேசிய பேச்சு சபையின் உரிமையை மீறுவதாகக் கைத்தொழில் விஞ்ஞான அலுவல் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ கிளப்பிய உரிமைப்பிரச்னையை சபாநாயகர் நேற்று நிராகரித்தார்.

உப சபரநயகர் திரு. நோர்மன் வைத்தியரத்ன இப்பிரச்னை தொடர்பாகத் தமக்கு அறிவித்ததன் பேரில் தான் அன்றைய ஹன்சாட்டைப் பார்வையிட்டதாகத் தெரிவித்த சபாநாயகர் எதிர்க்கட்சித் தலைவர் பேசிய போதே அமைச்சர் மத்தியூ குறுக்கிட்ட போது தாம் சபை உறுப்பினர்களைக் கூறவில்லை என்று திரு. அமிர்தலிங்கம் கூறியிருப்பதால் உரிமைப் பிரச்னை எழவில்லை என்று சபாநாயகர் சபையில் அறிவித்தார். (ம-கு)

## கச்சதீவிலிருந்துதே.எண்ணை சவர்க்காரம் திரும்புகிறது

(யாழ்ப்பாணம்)
நேற்றுக் கச்சதீவிலிருந்து திரும்பிய யாத்திரிகர்களில் சிலர் தாங்கள் கொண்டு சென்ற தேங்காய் எண்ணைத் தகரங்களையும், பார்சோப்களையும் திருப்பிக் கொண்டு வந்ததைப் பார்த்து சுங்கப் பகுதியினர் ஆச்சரியமடைந்தனர்.


கச்சதீவில் இந்திய யாத்திரி
(8-ம் பக்கம் பார்க்க)

### இன்று வானொலியில் அமிர் பேட்டி

(கொழும்பு)
எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் பேட்டி ஒன்று இன்று காலை 8 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவை 2-ல் இடம் பெறும். (இ)

The Windmill

Wind is a gift of nature.
It is free.
Please use it.



இன்றே பார்வையிடுங்கள்!
காற்றுடி நீர் இறைக்கும் இயந்திரம்

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக ஆதரவில் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும் கண்காட்சியில், சாமுவேல் சன்ஸ் அன் கம்பனி லிமிட்டெட் விற்பனை நிலையத்தையும், அதன் அருகில் காற்றுடி நீர்இறைக்கும் இயந்திரம் இயங்குவதையும் இன்று பார்வையிடுங்கள்.

காற்றுடி நீர இறைக்கும் இயந்திரத்தை யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக நாமே நிர்மாணம் செய்து அமைத்துக் கொடுக்கிறோம்.

விவசாய ரசாயன
தெளிகருவிகள்
மின்னியல்பொருட்கள்
பூட்டுகளுக்கு

சாமுவேல் சன்ஸ் அன் கோ லிமிட்.,
206, 208, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 462

Estd. 1922

WANTED
Additional Doctors,
Sisters Trained Nurses
For Day & Night
Apply
CENTRAL NURSING HOME,
THIRUNELVELI,
JAFFNA.
Telephone: 8225. (5180)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிஸ்கால் ஏலவிற்பனவு விளம்பரம்

**மாவட்ட மன்று, மல்லாகம்**

வழக்கு இல. எம். எஸ்/810

முருகேசபிள்ளை சிற்றம்பலம், சுழிபுரம்.

வழக்காளி

எதிர்

அருணாசலம் சுந்தரம், மூளாய், சுழிபுரம்.

எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றின் எம். எஸ்/810-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனத்தை 1980-ம் ஆண்டு சித்திரை மாதம் 16-ந் திகதி (16-4-1980) பிற்பகல் 1 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

5565/-ம் மேலும் முதல் ரூபா 3500/-க்கு வழக்கு வைத்த திகதி 1-8-1975-ந் திகதி தொடக்கம் தீர்வைத் திகதி 25-6-76-ந் திகதி வரைக்கும் 12% வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை 5% வட்டியும் செலவும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானைக் கோவிற்பற்று மூளாய் இறை கம்மானை நிலப்பரப்பு 4ம் வான்பயிர் செய்பயிர்களும் கிணற்றுப் பங்கும் வழிவாய்க்கால் தூர்வையுரித்தும் எல்லை கிழக்கு அருணாசலம் சுந்தரத்தினுதனம், வடக்கு கந்தையா சண்முகத்தினுதனம், மேற்கு சிறுப்பா நவரத்தினத்துக்குரிய காணி, தெற்கு காரை நகருக்குப் போகும் றோட்டு இதடங்களும்.

மூ. நல்லலிங்கம்,
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

5162


## வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுககு ஐந்து வருடங்களுக்குக்குறையாத அனுபவம் இருத்தல்வேண்டும்.

- Lathemen லேத்மென் 2
- Tinkers ரிங்கர்வேலைசெய்பவர் 2
- Security Officers பாதுகாவலர்கள் 2
- Foundary Men வார்ப்புத்தொழிலாளர் 2

Apply:

PROMOTERS ENGINEERING COMPANY LTD.
844, Point Pedro Road,
Nallur, Jaffna.



## கே. ஜி. எக்ஸ்பிரெஸ் பஸ் சேவை

சாயக்கூடிய, வசதியான, ஆடம்பரமான பஸ்கள் தினசரி கீழ்க்கண்ட இடங்களிலிருந்து புறப்படும்:

**கொழும்பு / யாழ்ப்பாணம்**

வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் கோவிலடி
லோரன்ஸ் ரோட் — இரவு 7-30 மணி
கோட்டை புகையிரத நிலையம் — இரவு 8-00 மணி

**யாழ்ப்பாணம் / கொழும்பு**

வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம் இரவு 8-00 மணி

முன்பதிவு செய்யும் இடங்கள்:
இராஜேஸ்வரி ஹோட்டல்,
69, நொறிஸ் றோட், கோட்டை.
தொலைபேசி: 25939 பிற்பகல் 2-00 மணிமுதல் இரவு 7-00 மணிவரை
பிளாசா தியேட்டர், வெள்ளவத்தை.
தொலைபேசி: 88070 பிற்பகல் 1-30 மணிமுதல் இரவு 10-00 மணிவரை
கமினி தியேட்டர், மருதானை.
தொலைபேசி: 93310 காலை 9-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை
வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 559 காலை 8-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

**கட்டணம் ரூ. 50/- (ஒரு வழி மட்டும்)**

பயணம் செய்யும் போது பணத்தை உங்களுடன் எடுத்துச் செல்லவேண்டியதில்லை கீழ் குறிப்பிட்ட இடங்களில் உங்கள் பணத்தை ஒப்படைக்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியும்.

★ பிளாஸா தியேட்டரில் ரூபா 1000/-க்கு உட்பட்ட தொகை ஒப்படைக்கவோ அல்லதுபெற்றுக் கொள்ளவோ முடியும்

கே. ஜி. இன்டஸ்ரீஸ்,
ஸ்ரீ சங்கராஜமாவத்தை,
கொழும்பு.
வெலிங்டன் தியேட்டர்,
யாழ்ப்பாணம்

எத்தொகையும் ஒப்படைக்கவோ பெற்றுக்கொள்ளவோ முடியும்

★ காலை 6 மணிக்கு பஸ்கள் கொழும்பு/யாழ்ப்பாணம் சென்றடையும்

5153


## அறிவித்தல்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் 6000க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும், கழிவுமா, கழிவுசீனி, பழுதடைந்த 45 கலன் வெற்றுத்தகரம், பாவித்த லொறி டயர் 900×20, 825×20, 750×20 ஆகிய பொருட்களும் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்குண்டு. ரூபா 250/- வைப்புப் பணமாக தலைமைக்காரியாலயத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்தை 1980-03-14ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல்வேண்டும். தபால் உறையின் இடது பக்கத்தில் 'சாக்குக் கேள்விப்பத்திரம்' எனக் குறிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1980-03-14ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. பகல் 4 மணிக்கு சங்க உபசபையின் முன்னிலையில் திறக்கப்படும்,

பொதுமுகாமையாளர்

தெல்லிப்பழை ப. நோ.
கூ. சங்கம்,
தெல்லிப்பழை.
1980-03-03 5166

## பதவி வெற்றிடம்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் கீழ்க்காணும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. கல்வித்தராதரம், வயது, அனுபவம், அண்மையில்பெற்ற இரு நற்சான்றிதழ்கள், ஆகியவற்றின் பிரதிகளோடு 1980-03-24ம் திகதிக்கு முன்னர்கிடைக்கக்கூடியதாகப் பொதுமுகாமையாளர் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை என்ற முகவரிக்கு பதிவுந்தபால் மூலம் அனுப்பி வைத்தல்வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பபப்பத்திரத்திலேயே அனுப்பபப்படல்வேண்டும். விண்ணப்பப் பத்திரங்களைப் பெறவிரும்புவோர் ரூபா 1/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெறவிரும்புவோர் முத்திரையிடப்பட்ட சொந்த முகவரியிட்ட கடித உறையையும் ரூபா 1/- பெறுமதியான முத்திரையையும் அனுப்புதல்வேண்டும். சங்கத்தின் நிரந்தர சேவையிலுள்ள பணியாளர்களுக்கு கீழ்க்குறிப்பிட்ட வயதெல்லை பொருந்தாது. விண்ணப்பதாரி குறைந்தபட்சம் 2 வருடங்களுக்காவது யாழ் மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல்வேண்டும். இச்சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பதவி: களஞ்சியப் பொறுப்பாளர் தரம் 11. பதவி-1 நிரந்தரம்.

தகமைகள்: 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த ப. (சாதாரணதரச்)சித்தியும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் பெற்றுள்ள 3 வருடகால அனுபவமும்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 23 முதல் 40 வரை.

பிணை: உரொக்கப்பிணையாக ரூபா 1500/- ஆதனப் பிணையாக ரூபா 10,000/-

சம்பளம்: 250 — 400 10×10, 12-50×4

பொதுமுகாமையாளர்

தெல்லிப்பளை ப. நோ.
கூ. சங்கம்.
தெல்லிப்பளை.
1980-03-08 5165

**விளம்பரம் செய்க வியாபாரம் பெருக**

## அமெரிக்கா பயணமானுர்



யாழ்ப்பாணம நல்லூரைச் சேர்ந்த சி. பாலஸ்நதா இந்தியாவில் கேரளத்திலுள்ள விமான பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் தனது விமானத்துறைப் படிப்பை முடித்த பின்னர் கலிபோர்ணியாவிலுள்ள நோத்துறப் பல்கலைக் கழகத்தின் மேற்படிப்புக்காக அமெரிக்கா பயணமானுர். இவர் செங்குந்த இந்துக் கல்லூரி, யாழ் பரியோவான் கல்லூரி, வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ். பல்தொழில் நுட்பக்கல்லூரி: ஆகியவற்றின் பழைய மாணவருவாவார்.

இவர் யாழ்ப்பாணம் நல்லூர் ஈஸ்வரி மில்ஸ் அதிபர் க. சிவஞானம், ஓய்வு பெற்ற திருநெல்வேலிசெங்குந்த இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி. சிவபாக்கியம் சிவஞானம ஆகியோரின் நான்காவது புத்திரருமாவார். (கு)

பொ. காங்கேயன்
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசு
கொக்குவில்

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

இல. 84 அ-
(பிரிவுகள் 524, 532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்திலிங்கம் நடராசா பெண் கௌசலா என்னும் கௌசலாதேவி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

- மரணமெய்தியவர்.

வைத்திலிங்ககம் நடராசா, கலட்டி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

- மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம்: இல. 3506

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980ஆம்ஆண்டு, சித்திரை மாதம் 11-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென் பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்

நீதிமன்றக்கட்டளைப்படி,
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

1980ஆம் ஆண்டு பங்குனி மாதம் 6ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

5161

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணத்தில் ஓர் பிரபல ஸ்தாபனத்திற்கு, வான் மூலம் பொருட்கள் விற்பனை செய்யக் கூடிய ஆற்றல் வாய்ந்த விற்பனையாளர் தேவை. விற்பனை சம்பந்தமான அறிவாற்றல், மூன்று வருட அனுபவத்துடன் கூடியவர்கள் சான்றிதழ்களுடன் 15-3-80-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5160 C/o. ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.

5160

றபர்சீல் செய்வதற்கு ஆண் உதவியாளர் தேவை. மேவின்ஸ், 91/1, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்,

5129

### விற்பனைக்கு

6 ஸ்ரீ 3981 லம்பிறட்டா ஸ்கூட்டர் (இந்தியன் மொடல்) விலை சுமார் ரூபா 7000/- A. B. அஸ்பறி, 'தவ இல்லம்' அராலி வடக்கு வட்டுக்கோட்டை. 5163

உடம்பராவில் 100 பனை மரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். T. சிவராசா (ராண்ட) 43A, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 5156

### வகுப்புகள்

G. C. E. சாதாரண வகுப்பு ஆங்கில இலக்கண இலக்கியம் (English Literature) ஆங்கிலப் பேச்சு (Spoken English) தனிப்பட்ட முறையாயும், வீடுகள் சென்றும் கற்றுக் கொடுக்கப்படும். தொடர்பு: விளம்பர இல:5164, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

5164

## ஏழாலை ம. வி. பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகாவித்தியாலயத்தின் பொருட்காட்சி இம் மாதம் 11 ம் திகதி செவ்வாய்ச்கிழமை காலை நடைபெறவுள்ளது.

பிரதம கல்வி அதிகாரி திரு. சி. பொ சிவபாதம் பொருட்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

புதிதாகப் பொருத்தப்பட்ட மின்சாரத்தை வட்டாரக் கல்வி அதிகாரி ஆரம்பித்து வைப்பார். (கொ)

## காவலூரில் தோட்டக்காட்டினிலே அறிமுகவிழா

(ஊர்காவற்றுறை)

மாத்தளை தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் 'தோட்டக் காட்டினிலே' சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா நாளை ஞாயிற்றுகிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

காவலூர் இலக்கிய வட்டம் நடாத்தும் இவ் விழா தலைவர் திரு.ஆ. சபாரத்தினம் தலைமையில்நடைபெறும். திரு. நா. சுப்பிரமணியம் பிரபல எழுத்தாளர் காவலூர் எஸ் ஜெகநாதன், இ. ஜீவகாருண்யன்(இமையவன்) .செல்வி சாரதாசண்முகநாதன்உட்படபலர் உரையாற்றுவார்கள்.

நூலாசிரியர்கள் , லரன்டின் மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன் ஆகியோர் பதிலுரையாற்றுவார்கள். (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தனியொரு மனிதன் ருனும் வேலையில்லாமல் பட்டினியாய்க் கிடப்பானாயின், மற்று எவனொருவனால் மனவமைதியுடன் சாப்பிட முடியும்?

—மகாத்மாகாந்தி

## மக்கள் கருத்து

### யாழ். மாநகரசபையினர் கருணை காட்டுவார்களா?

எனது அறிவுக்கெட்டிய வரை குறுகிய காலவரையுள் ஏற்படும் பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்காக பகிரங்க விளம்பரம் போடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படுவது தற்போதய நிர்வாகத்தில் தான் என எண்ணுகிறேன். இந்த நடைமுறைக்காக இக்கூட்டணி நிர்வாகத்தைப் போற்றும் இச்சமயம்—

தற்போது விண்ணப்பம் கோரிய பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் தொடராக நடந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் அவர்களின் பொது விளம்பரத்தில் காணப்பட்ட 'மாநகர சபையில் ஏற்கனவே தொழில்புரிவோருக்கு முன்னுரிமை' என்றதனை நடைமுறைப்படுத்துவார்களா என்று நான்மட்டுமல்ல என்போன்று பலவருடகாலம் தொழில்புரியும் ஊழியர்கள் கேட்கவிரும்புகிறோம்.

'தொழில்தேடுதல்' என்பது மிகவும் இக்கட்டாகஉள்ள இக்காலத்தில் நல்லதகைமைகளைக் கொண்டிருந்தும் சாதாரணமான கூலித்தொழிலாளர்களாகப் பலர் இருக்கின்றனர். இவர்கள் மேல் எந்த நிர்வாகத்தினர் பார்வையும் விழுந்ததாக இல்லை. காலங்காலமாகக் கூலித்தொழிலாளர்களாக இருப்பவர்கள் அதிலேயே இருக்கவேண்டும் என்பது என்ன நீதி? எனவே, தற்போதய நிர்வாகம் இவர்கள்மேல் கருணைகாட்டுவார்களா? சம்பந்தப்பட்டவர்கள் மனம் இரங்குமா? நல்ல முடிவு காணக் காத்திருக்கிறோம்.

யாழ். மாநகர சபையின்
ஒரு தொழிலாளி

## இன்றைய இன்னிசைக் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

யாழ். நுண்கலை மன்றம் அளிக்கும் இன்னிசைக்கச்சேரி இன்று மாலை யாழ்.றிம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு.எஸ், திலகநாயகம் போல் இசைக்கச்சேரி நிகழ்த்துவார். பக்கவாத்தியங்களாக திருவாளர்கள் வி.கே.குமாரசாமிவயலின், எஸ், மகேந்திரன் மிருதங்கம் எம், சிவசிதம்பரநாதன் கஞ்சிரா வாசிப்பார்கள். (கொ-கு)

சிங்கப்பூரில்

## இந்துசமயப் பெருவிழா

(சிங்கப்பூர்)

சிக்கப்பூர்—சிலோன் றோட் காத்தோங் ஸ்ரீ செண்பக விநாயகர் கோவிலில் சென்றமாதம் 16, 17, 18 ஆகிய 3 தினங்களில் இந்து சமயப் பெருவிழா நடைபெற்றது.

இலங்கையிலுள்ள சுன்னாகம் சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக்குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பல சமய அறிஞர்கள், கவிஞர்கள் சொற்பொழிவாற்றினர்.

18-ம் திகதி நடந்த இறுதி நிகழ்ச்சியில் பிரதம சொற்பொழிவாளராகக் கலந்து கொண்ட சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் "அருளாளர் காட்டிய அருள்நெறி" பற்றி சிறப்புரையாற்றினர்.

இன்னிசை நடனம், பஜனை முதலான கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பொலிஸார் சந்தேகிக்கும் வீடுகளை

# 'வாரண்ட்' இல்லாமலே பொலிஸார் சோதனையிடலாம்

(யாழ்ப்பாணம்)

"திருட்டுப்பொருள் ஒருவீட்டில் இருப்பதாகத் தகவல் கிடைத்தால், அவ்வீட்டை சோதனையிட பொலிஸ்சட்டம் 68ம் பிரிவின்படி பொலிசாருக்கு அதிகாரம் இருக்கிறது. வீட்டை சோதனையிட 'வாரண்ட்' அவசியமில்லை"

வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் (டி.ஐ.ஜி) திரு.பி. மகேந்திரன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். திரு. பி மகேந்திரன் மேலும் கூறியதாவது:

'திருட்டுச்சாமான்கள் இருப்பதாகத் தகவல்கிடைத்து ஒரு வீட்டில்அப்பொருள்கள் இருப்பதாகச் சந்தேகப்பட்டால், பொலிசார் அவ்வீட்டைச் சோதனைசெய்யலாம். 1866-ம் ஆண்டுமுதல் இச்சட்டம் இருந்துவருகிறது.

"வீட்டிற்கு பொலிசார் வந்து, வீட்டைசோதனையிடப் போவதாகத் தெரிவித்தால், அவர்கள் பொலிசார்தான் என்று அறிந்திருந்தால், வீட்டுக்காரர், பொலிசாருக்குப் பூரண ஒத்துழைப்புக்கொடுத்து வீட்டைச் சோதனையிட அனுமதிக்க வேண்டும். சோதனையிட்டபின், வீட்டில் திருட்டுப்பொருட்கள் இல்லாவிடில், பொலிசார் அதுபற்றி பொலிஸ்நிலையத்திற்கு அறிவிப்பார்கள்.

"பொலிசார் என்றுகூறிச் சோதனையிடவந்தவர்களில் சந்தேகமிருந்தால், உடனேகிராம சேவகருக்கு தகவல் அனுப்பி அவர்மூலம் அடையாளம் அறிந்துகொள்ளலாம். பின் அவர்கள்சென்றபின், உடன் பொலிஸ்நிலையம்சென்று புகார் செய்துகொள்ளலாம். கிராம சேவகர்வந்து அவர்கள் பொலிசார்தான் என்றால் சோதனையிட அனுமதிக்கலாம்.

"வாரண்ட் இல்லாமல் வீட்டைச் சோதனைக்குவிடக் கூடாதென சிலர் கருத்துக்கொண்டிருப்பது தவறானதாகவும், மதுபானம், சூதாட்ட நிலையங்களையும், கள்ளச்சாமான்கள் உள்ளதாகச் சந்தேகிக்கப்படும் வீடுகளையும் இச்சட்டத்தின்படி பொலிசார் 'வாரண்ட்' இல்லாமல்சோதனையிடமுடியும்' (க)

காங்கேசன் துறைமுகத்திற்கு

# லட்சம் மூடை மாவுடன் இத்தாலிய கப்பல் வந்தது!

(காங்கேசன்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாட்டை உடனடியாகப் போக்குமுகமாக கொழும்புத் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த கப்பல் ஒன்றை உணவு, கூட்டுறவுத் துறைத் அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் காங்கேசன் துறை துறைமுகத்திற்குத் திசை திருப்பியுள்ளார். கடந்த இரண்டு மாதங்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் மாவைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட கஷ்டத்தை பாராளுமன்றத்தில் வடபகுதி உறுப்பினர்கள் பலர் எடுத்துக் காட்டியிருந்தனர்.

"போடபெக்கோவா' என்ற இத்தாலிய தேசத்துக்கப்பல் ஒன்றரை லட்சம் மாமூடைகளுடன் நேற்று வெள்ளிக்கிழமை காங்கேசன்துறைத் துறைமுகத்தை வந்து சேர்ந்ததாகவும், இறக்குமதி வேலைகளை உடனடியாக ஆரம்பித்து உணவு இலாகாவிற்குமாமூடைகளைஒப்படைப்பதற்கானஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இக்கப்பலின்கொழும்பு ஏஜெண்டுகளான இலங்கைகப்பல் கூட்டுத்தாபனத்தின் வடபகுதித் துறைமுகங்களின் பிரதிநிதியான திரு, க. ஜெயபாலசிங்கம் தெரிவித்தார்.

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு இவ் வருடத்தில் வந்துசேரும் முதலாவது உணவுக்கப்பல் இதுவாகும். கப்பலின் இறக்குமதி வேலைகளை யாழ்ப்பாண மாவட்டக்கூட்டுறவுத் துறைமுகத் தொழிலாளர்சேவைச்சங்கம் மேற்கொள்ளும். சுமார் ஐந்நூறு தொழிலாளர்கள் இறக்குமதி வேலைகளில் ஈடுபடுவார்கள். இதைத் தொடர்ந்து மேலும் பல உணவுக் கப்பல்கள் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படுமெனத் தெரியவருகின்றது. கப்பலின் இறக்குமதி வேலைகளைக் கூடிய விரைவில் செய்துமுடிப்பதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். நடராசா செய்துள்ளார். (அ)

## தவக்கால நற்சிந்தனை



நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்
நீதியைத் தேடுங்கள்.
(இசை. 2-12)

தபசுகாலம் நம்மை தூய்மைப்படுத்தத் தூண்டும் காலம். மனிதன் பெலவீனன். தவறுகள் புரியக்கூடியவன். பற்பல ஆசைகள், நாட்டங்களினால் கவரப்படக் கூடியவன். எனவேதான் இறைவன் என்றும் மனிதனை மனம்மாற அழைத்தவண்ணம் இருக்கின்றார்.

"உங்களைச் சுத்திகரியுங்கள்! தூய்மைப் படுத்துங்கள்! தீமை செய்வதைவிட்டு ஓயுங்கள்" என்று இசையாஸ் இறைவாக்கினர் வழியாக கூறிய இறைவன் நமது குறையற்ற, குற்றமற்ற வாழ்வில் திருப்தி காணாது நம்மிடம் இருந்து ஒரு நிறைவான வாழ்வை எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றார்.

"நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். ஒதுக்கப்பட்டவனுக்கு உதவி செய்யுங்கள். நீதியைத் தேடுங்கள்" என்று நமக்கு அறைகூவல் விடுக்கின்றார்.

எனவே இத் தபசுகாலத்தில், பாவத்தை வெறுத்து குற்றங்குறைகளை, தீச் செயல்களை தவிர்த்து வாழ்வதோடு மட்டும் நின்றுவிடாது நாம் அன்புச் செயல்களில் ஈடுபட்டு ஏழை எளியவர்கட்கு பரிவு காட்டி, அவர்கள் வளர்ச்சியில் நாம் மகிழ்ச்சிகொள்ள முயற்சிப்போம்.

—வண. மேரி பஸ்ரியன்
அடிகள்

# இந்தியாவை எதிர்நோக்கும் சில பிரச்னைகள்

இந்திய அரசியலில்: 60க்கள் 70க்கள், 80க்கள்-"இந்திரா காந்தியின்" சகாப்தம் என்று எதிர்கால வரலாற்றுசிரியர்கள் எழுதுவார்களா? இதற்கான ஆதாரங்களை அண்மையில் நடைபெற்ற இந்திய தேர்தல் முடிவுகள் அளித்துள்ளன.

திருமதி 'இந்திரா காந்தியின் முன்னைய 11 ஆண்டுக் கால ஆட்சிக் காலத்தில், இந்தியாவின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க சாதனைகளைக் கண்டது என்பதை ஏற்லாற்றுசிரியர்கள் நிச்சயம் வரறுக் கொள்வார்கள். சுதந்திர இந்தியாவின் சிற்பிகளான மகாத்மாகாந்தி, ஜவஹர்லால் நேரு ஆகியோர் உருவாக்கிய வெளிநாட்டுக் கொள்கை சர்வதேச அரங்கில் இந்தியாவின் அந்தஸ்தை கணிசமான அளவு உயர்த்திய அதே நேரத்தில் இந்திரா காந்தி இந்த வெளிவிவகாரக் கொள்கையை தொடர்ந்து செயல்படுத்திய 'முறை' முழு பாரதத்திற்குமே மேலும் கௌரவத்தை உயர்த்தியது.

டில்லியிலுள்ள் அரசியல் தலைவர்கள் சுட்டிக்காட்டியிருப்பது போன்று, மிக நெருக்கடியான கட்டத்திற்கூடாக இந்தியா இன்று சென்று கொண்டிருக்கிறது. பொருளாதார வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட பெரும்பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும், இந்திய ஜனநாயகத்தின் அரசியல், சமூக நிலைபாட்டின் அடித்தளத்தை ஸ்திரப்படுத்தவும் வேண்டிய பணிகளுக்கு இந்தியா முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆசிய நாடுகளையும் இதர நாடுகளையும் போன்று, ஏகாதிபத்திய அத்துமீறல்களும், எதிர்ப் புரட்சி சூழ்ச்சிகளும் அற்ற ஒரு சர்வதேச ஸ்திரத்தன்மை இந்தியாவுக்கு இன்று அவசியமாகும்.

இந்தியாவுக்கு வறுமை, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற உள்நாட்டுப் பிரச்னைகள்தவிர; பாகிஸ்தான், சீனாபோன்ற அண்டை நாடுகளுடனான பிரச்னைகள் இருந்து வருவது தெரிந்ததே. சீனாவைப் பொறுத்தவரையில் அது நீண்டகாலமாக இந்தியாஉட்பட பல அண்டை நாடுகளில் பிரதேச உரிமை கோரி வருகிறது. 1962ல் இந்தியாமீது படையெடுத்த போதிலும் சீனா தன் கொள்கையை இன்னமும் கைவிடவில்லை என்பதை, அண்மைக் கால நிகழ்ச்சிகள்உறுதிப்படுத்துகின்றன. அதே வேளையில் இந்திய-பாகிஸ்தான் பிரச்னைகளும் இன்னும் தீர்கப்படவில்லை. பாக்கிஸ்தானை மேன் [illegible] திட்டங்கள் இவ்விரு நாடுகளுக்குமிடையில் மேலும் விரிசலை ஏற்படுத்தவே செய்யும். உள்நாட்டுப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணுவதில் தன்சக்தி முழுவதையும் செலவு செய்ய வேண்டிய இந்தியா, அயல் நாடுகளின் நடவடிக்கை காரணமாக தனது பாதுகாப்பைப் பலப்படுத்தும் செயலில் இப்பொழுது தீவிரமாக இறங்க வேண்டியுள்ளது.

இந்துசமுத்திரத்தில் அமெரிக்க ராணுவத்தளம் நிறுவப்படுவதும், படைக்கப்பல்கள் நிலைகொண்டிருப்பதும் அனைத்து நாடுகளுக்கும், முக்கியமாக இந்தியாவுக்கும் ஆபத்தானதே. பங்களாதேஷ் விவகாரத்தின்போது அமெரிக்காவின் 7 வது கடற்படை தோன்றி அச்சுறுத்தியதை மறப்பதற்கில்லை. அமெரிக்க-உறவுகளால் ஏற்பட்டுள்ள ஆபத்துகுறித்து பிரதமராகப் பதவி ஏற்றவுடன் திருமதி இந்திரா காந்தி சுட்டிக் காட்டியதையும் இங்கு நினைவு கொள்ளலாம். பாகிஸ்தானை பாதுகாக்க எடுக்கப்படுப்படுவதாகக் கூறப்படும் நடவடிக்கைகள் யாவும் விரும்பியோ, விரும்பாமலோ இந்தியாவையும் யுத்த தயாரிப்பு ஆயுதப்போட்டி இத்தியாதிக்குள் இழுத்துவிடவே செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே இந்தியாவின் புதிய தலைமை உலகிலுள்ள நண்பர்களையும், வைரிகளையும் இனங்கண்டு உலக சமாதானத்தை நிலைநிறுத்தும் வழிகளை மேற்கொள்ள வேண்டியபொறுப்பு அதற்குத் தலையாயதாகவே இருக்கும் என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லை.

'ஊடுருவி'

## த.இ.பேரவை பொதுச்சபை நாளை கூடும்

(மட்டக்களப்பு)

தமிழ் இளைஞர் பேரவையின் பொதுச்சபைக்கூட்டம்மட்டக்களப்புதமிழ் இளைஞர் பேரவை அலுவலகத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. [வெ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில் .... இவ்வாரம் ....

# நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நிகழ்ந்த 'அமிர்', யோகேஸின் ஆக்ரோஷப்பேச்சு!

## பிரதமர் - விஜேசிறி சர்ச்சை; நிபந்தனையுடன் 'சவால்' ஏற்கப்பட்டது

விக்டோரியா கல்லூரி பழைய மாணவரான எதிர்க்கட்சித்தலைவர் திரு அமிர்தலிங்கம், சற்று நீண்ட நாட்களுக்குப்பின்னர், தனக்கே உரிய சாதுரியத்துடன் 'தடைதாண்டல் ஓட்டத்தில்' ஈடுபட்டிருந்தார்

சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவரான யாழ்ப்பாணம் உறுப்பினர் திரு. யோகேஸ்வரன், பலமான எதிரணியுடன் வெகுலாவகமாக 'ஹொக்கி' ஆடிக்கொண்டிருந்தார்.

சென். தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர் இன்றைய பிரதமர் திரு. பிரேமதாச கிரிக்கட் துடுப்படியில் ஈடுபட்டிருந்தார்.

ஒரே உற்சாகக் குரல்கள்! நேரம்போவதே தெரியாமலிருந்தது!

### உறுப்பினர் சுமத்திய குற்றச்சாட்டு

சபை கூடியதும் ஹரிஸ்பத்துவ 2-வது உறுப்பினர் திரு. ஆர் பி. விஜேசிறி, பெப்ரவரி மாதம் 22ந் தேதி கட்டிடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் சிமெந்து கொள்வனவு பற்றி சபையில் சுமத்திய சில குற்றச்சாட்டுகள் குறித்து உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை பிரதிஅமைச்சர் திரு. இம்புலான நீண்டதோர் அறிக்கையைச் சபையில் சமர்ப்பித்தார். அமைச்சர் நீளமான அந்த அறிக்கையை வாசித்துமுடித்து, அமர்ந்ததும் ஹரிஸ்பத்துவ 2-வது உறுப்பினர் எழ, சபையில் உற்சாகம் எழுந்தது.

உறுப்பினர் ஒருவரின் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாவிட்டால் அவர் தர்மஸ்தாபனமொன்றுக்கு தண்டப்பணம் செலுத்துவதற்கு சபை நிரந்தரவிதிகள் இடமளிக்கின்றனவா? என்ற பிரச்னை அங்கு எதிரொலித்தது.

பொறுப்பற்றவிதத்தில் உறுப்பினர் சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிப்பதற்காக கட்டிடப்பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக பேச்சுவார்த்தைகளை இங்கு வெளியிடநேர்ந்துவிட்டது; இதனால் உலக சந்தைப் பேரங்களில் அந்த ஸ்தாபனம் பாதிப்படையப்போகிறது. அந்தப் பாதிப்பு மக்கள் மீது தான் தாக்கத்தை ஏற்படுத்தப்போகிறது'' என்று பிரதிஅமைச்சர் கூறி அமர்ந்தபோது; தன்னுடைய குற்றச்சாட்டுக்கள் ஆதாரபூர்வமானவை என்றும் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டால் அங்கு அவற்றை நிரூபிக்க தாம் தயாராகவிருப்பதாகவும் கட்டிடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பான பிரதமரிடம் சவால்விடுத்தார் விஜேசிறி!

### சவாலேஏற்ற பிரதமர்

சவாலேஏற்றுக்கொள்வதற்கு நிபந்தனை ஒன்றை விடுத்தார் பிரதமர்.

''குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடன் வேலையிலிருந்து நீக்குவேன் நான். ஆனால் அவை நிரூபிக்கப்படாவிட்டால், உறுப்பினர் நான் கூறும் தர்மஸ்தாபனத்துக்கு தண்டப்பணம் செலுத்தவேண்டும்'' என்பதே பிரதமர் விடுத்த நிபந்தனை.

நிபந்தனையை ஏற்க ஹரிஸ்பத்துவ உறுப்பினர் தயாரானபோதும் சபாநாயகர் ஜனுப் பாக்கீர் மாக்கார், பிரதமர் விடுக்கும் நிபந்தனை, சபை நிரந்தரவிதிகளின் கீழான ஓர் உறுப்பினரின் உரிமைக்கு சவாலாக அமைகிறது என்று தெரிவித்தார்.

''எனது உத்தியோகத்தர் மீது பழிசுமத்த நான் அனுமதிக்க மாட்டேன்; இப்படியொரு நிபந்தனைக்கு உறுப்பினர் உடன்படவேண்டும்' என்று பிரதமர்கூற, 'இச்சபையின் ஒவ்வோர் உறுப்பினரதும் உரிமையை நான் பாதுகாக்கவேண்டும்' என்றார் சபாநாயகர்!

### நிபந்தனையை விஜேசிறி ஏற்றார்

எனினும், பிரதமரின் நிபந்தனை எதுவானாலும் தாம் அதை ஏற்றுக்கொள்வதாக ஹரிஸ்பத்துவ உறுப்பினர் கூற, அதிகதொகை வேண்டியதில்லை; மன்னிப்புக்கோரி, பத்து ரூபா செலுத்தினால் போதுமென்றுகூறிய பிரதமர், மறுநாளே உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் ஆலோசனைக்குழு மூன் உறுப்பினர் அதனை நிரூபிக்கலாம் என்றார்.

விஜேசிறி ஏற்றுக்கொண்டார்.

## 'மாலி'

சிலதிமிடங்களுக்கு நீடித்த இந்த வாதப்பிரதிவாதங்களின் பின்னர், கடந்தமுறை அமர்வைப்போலவே; வாழ்க்கைச் செலவு - பொருளாதாரக் கொள்கை - அபிவிருத்திநடவடிக்கைகள் பற்றிய விடயங்களே சபையில் மீண்டும் காரசாரமாக இடம்பெற்றன.

பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் ஜனுப் நைனா மரிக்கார், உள்நாட்டுதிறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின்கீழ், வரவு-செலவுத்திட்டத்துக்கு புறம்பாக, மேலும் நூறுகோடிரூபாவை திறைசேரி உண்டியல்மூலம் கிடைக்கப்பெறும் தீர்மானத்தை சபையில் சமர்ப்பித்தபோது எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் பலத்த கண்டனக் குரல் எழுப்பினார்.

### 'அமிர்'பலத்த கண்டனம்

அரசின் இந்த நடவடிக்கை, பாவனைப் பொருட்களின் விலையை மேலும் அதிகரிக்கச் செய்யப்போகிறது என்று எச்சரிக்கைவிடுத்த அவர், இந்த அரசின் பொருளாதார நடவடிக்கைகளை தாம் திட்டவட்டமாகவும், வன்மையாகவும் கண்டிப்பதாக மிக உரத்த தொனியில் ஆக்ரோஷத்தோடு கூறிவிட்டு, இம்முறையாவது ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் சரியான விதத்தில்எனது பேச்சைக்குறிப்பிடட்டும் என்றும் சொன்னார்.

அரசின்நடவடிக்கை,குறித்த சிலரின் கைகளில் மேலும் பல 'மில்லியன்'ரூபாய் புரள்வதற்கே வழிவகுக்கும் என்று விமர்சித்துக்கொண்டிருந்த வேளை அரசாங்க பின்வரிசைகளிலிருந்து கூச்சல்கள் எழுந்துகொண்டேயிருந்தன! பல தடவைகளில் பேச்சினிடையே, ஒழுங்குப்பிரச்னைகளும் கிளப்பப்பட்டன!

அவைதான் அவரின் 'ஓடு பாதையில்' போடப்பட்ட 'தடைகள்' ஆனால் சபாநாயகர் அவை ஒவ்வொன்றையும் தாமே விலக்கி வழிவிட்டுக்கொண்டிருந்தார்!

### மத்தியூ கிளப்பிய ஒழுங்குப்பிரச்னை

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. திரு சிறில்மத்தியூதான் முதன்முதலாக 'தடை'யைப் போட்டார்.

''அறியாதவர்களும், அறிவற்றவர்களும் ஹ.. ஹூ என்று சத்தமிடுகின்றனர்'' என்று கூறியதனால் இச்சபை உறுப்பினர்களுக்கு எதிர்க்கட்சித்தலைவர் அவமதிப்பை ஏற்படுத்தியிருக்கிறார் என்றும், அவரின் அக் கூற்றுக்களை அவர் வாபஸ்பெறவேண்டும் என்றும் ஒழுங்குப்பிரச்னை கிளப்பினார் அமைச்சர்.

'சபை உறுப்பினர் எவரையும் குறிப்பிட்டு எதிர்க்கட்சித்தலைவர் அப்படிப்பேசவில்லை; நான் அவரது பேச்சை அவதானித்துக்கொண்டே இருந்தேன்'' என்று கூறி அமைச்சரின் ஒழுங்குப்பிரச்னையைநிராகரித்தார் சபாநாயகர்.

### 'துரை'வெளியிட்ட கருத்து!

எதிர்க்கட்சித்தலைவர் அப்படிக்கூறினார் என்று அமைச்சர் மீண்டும் கூறவும் 'எதிர்க்கட்சித்தலைவரின் பேச்சு அமைச்சருக்கு எப்போதும் தவறாகவே தான் கேட்கும், அது அவரின் காதிலுள்ள கோளாறு' என்றார் திரு. துரைரத்தினம்!

'மக்களின் உண்மைநிலையை இங்கு உறுப்பினர்கள் வெளிப்படுத்துவது அவசியம்;அதனால் தான் அப்படியான ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நாம் இங்கு பயன்படுத்துகிறோம்'' என்று தெரிவித்த திரு. அமிர்தலிங்கம், 'கடந்த இரண்டரை ஆண்டுகளாக நீங்கள் சாதித்ததெல்லாம் சாதாரண மக்கள் மீ ான சுமைதான்'என்றுகூறவும், பின்னாலிருந்து 'மக்கள் எம்முடன்தான்'என்று சில குரல்கள் எழுந்தன.

'ஆம்; அடுத்த தேர்தலில் நீங்களும் மக்களுடன்தான்' என்றார் அமிர்தலிங்கம்!

தன்னுடைய கலைமாணி பட்டப்படிப்புக்கு ஆங்கிலத்தையும் ஒரு பாடமாகக் கொண்டிருந்தவரான திரு. அமிர்தலிங்கம், 'எனது ஆங்கிலப் பேச்சைப் புரிந்துகொள்வதற்கு உறுப்பினர்களின் வசதிக்காக சபையில் ஓர் ஆங்கில அகராதியும்வைக்கப்படவேண்டும்போலிருக்கிறது' என்றார்!

32 ரூபாவுக்கு உற்பத்திசெய்யப்படும் சிமெந்தை அரசு 75 ரூபாவுக்கு-கறுப்புச்சந்தைவிலையில் விற்பனைசெய்வதாகஎதிர்க்கட்சித்தலைவர் குற்றஞ்சுமத்தியபோது குறுக்கிட்ட பிரதிக் கைத்தொழில்விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. டென்சில் பெர்னாண்டோ, 'பெற்றோலியம் பொருள்களை நாம் மானயவிலையில் விற்கிறோமே?' என்றார்.

### 'அமிரும்' 'இடியம்ஸ்'ம்

பிரதிஅமைச்சரைப் பார்த்து ''Dont talk through the hat', என்று திரு. அமிர்தலிங்கம் கூறவும், 'நான் எனது வாயினால் தான் பேசுகிறேன்; எதிர்க்கட்சித்தலைவர் தனது கூற்றை வாபஸ்பெறவேண்டும்' என்று சபாநாயகரிடம் கோரினார் பிரதிஅமைச்சர்!

தான் கூறிய idiom-இன் [illegible] கொள்ளவில்லையென்றுகூறி, அச் சமயத்தில்தான், ஆங்கில அகராதி பற்றிக் குறிப்பிட்டார் அமிர்.

''ஜனாதிபதி எப்பொருளுக்கும் மானியம் அளிக்கப்படமாட்டாது என்று கூறியிருப்பதும்,பிரதிஅமைச்சரின் இக்கூற்றும் எரிபொருள்கள்மீது மற்றுமொரு விலையுயர்வை சூசகமாக வெளிப்படுத்துகின்றனவா? கூறிவிடுங்கள்''என்று கூறிய அமிர், 'இதையும் நான் Let the cat out of the bag என்ற idiom ஆகச்சொன்னால் பிரதிஅமைச்சர் சிலவேளை இங்கு பூனை எதையும் தான் வைத்திருக்கவில்லை என்று கூறக்கூடும் அதனால் நான் idiomஐ தவிர்த்துக்கொள்கிறேன்''என்று கூறவும் சபையில் பெருஞ்சிரிப்பு எழுந்தது.

### கூச்சலும் குறுக்கீடும்

சிலநாட்களின் பின்னர் அன்று சபையில் திரு. அமிர்தலிங்கத்தின் பேச்சினிடையே அதிகமான குறுக்கீடுகளும் கூச்சல்களும் எழுந்துகொண்டிருந்தன.

பாணந்துறை உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ ஒரு கட்டத்தில் ''எமது அமைச்சர்கள்சென்ற நாடுகளுக்கெல்லாம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சென்று ஜே. ஆர். மற்றொரு இடி அமீன்'' என்று சுவரொட்டிகள் ஒட்டினர்'' என்றார்.

சபையின் 'மரதன் ஓட்டச் 'சாம்பியனான' பிரதமர் திரு. ஆர். பிரேமதாச, சுதந்திரக் கட்சியினர்மீது பலமான 'துடுப்படி'யில் ஈடுபட்டிருந்தார்.

சுதந்திரக்கட்சியினர் இன்று மேடைகளில் கூறுவதுபோல், நாம் ஆட்சிக்கு வந்ததும் பொருட்களின் விலைகளைக் குறைப்போம் என மக்கள்முன் நாம் வாக்குறுதி அளிக்கவில்லை என்ற பிரதமர், கடந்த தேர்தல் காலத்தில் சுதந்திரக் கட்சியின் பத்திரிகையாகவேயிருந்த 'சிலோன் டெய்லி நியூஸ்' பொருள்களின் விலைகளைக்குறைப்போம் என்று நாம் கூறவில்லை- ஜே. ஆர்' என்று ஜே. ஆரின் தேர்தல் காலப் பேச்சை தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருப்பதாக கூறி அதனை வாசித்த அவர், சுதந்திரக் கட்சியினர் இதையும் கூட்டங்களில் கொண்டு சென்று கூறுவதற்கு வசதியாக அவர்களுக்கு கொடுப்பதற்காகவே 'போட்டோ- ஸ்ராட்' பிரதியும் கொண்டு வந்திருக்கிறேன் என்றும் கூறி, முன்னாலிருந்த திருமதி சிறிமாவோவிடம் கொடுக்கும்படி அப்பிரதியை சபைச் சேவகரிடம் கொடுத்தனுப்பினார். அப்போது அரசாங்க உறுப்பினர்கள் கரகோஷமிட்டார்கள்!

சிறிமாவோவும் சிரித்தபடியே அதனை வாங்கிக் கொண்டார்.

### பிரதமரின் சொறபோர்

சுதந்திரக் கட்சியினருக்கு எதிராக பிரதமர் 'வேகமான' சொற்களை வீசியபோது கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ தனியொருவராகவே சபையில் அமர்ந்திருந்தார். பல சமயங்களில் பிரதமரின் பேச்சில் குறுக்கிட்டார்.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஐ. தே. க. வினர் என்ன கூறியிருந்தாலும், ஐ. தே. க. வின் அதிகாரபூர்வ அறிக்கையான தேர்தல் விஞ்ஞாபனத்தில், தாங்கள் ஆட்சிக்கு வரின் வாழ்க்கைச் செலவைக் குறைப்போம் என்று கூறப்பட்டிருக்கிறதென்று அதனைச் சபையிலும் சமர்ப்பித்து பிரதமரின் வாதத்துக்கு எதிர்வாதம் புரிந்தார் யாழ்ப்பாணம் உறுப்பினர்!

### யோகேஸின் சாதுரியப்பேச்சு

அமைச்சர்கள் உட்பட அரசாங்க தரப்பினரின் பலத்த குறுக்கீடுகளுக்கும் கூச்சல்களுக்குமிடையே திரு. யோகேஸ்வரன் வெகு சாதுரியமாக- விட்டுக்கொடுக்காது ஆக்ரோஷத்துடன் உரையாற்றிக்கொண்டிருந்த, அந்நிலை பொதுவாக திரு. அமிர்தலிங்கம் உரையாற்றுவது போன்று சபையில் இருந்தது!

''நீங்கள் எவ்வளவுக்கு வேண்டுமானாலும் கூச்சலிடுங்கள். உங்கள் கூச்சல் என்னைத் தடுத்துவிடாது என்று அமிரின் பாணியிலேயே தன் பேச்சைத் தொடர்ந்தார் திரு.யோகேஸ்வரன்.

அபிவிருத்திபற்றிப் பேசுவதையிட்டு அரசு வெட்கப்படவேண்டும் என்று கூறிய யோகேஸ்; அரசின் இலவச புத்தகவிநியோகம் பற்றியும் கடுமையாக கண்டித்தவேளை, முன்னாள்கல் வியமைச்சர்நிஸங்காவும், கல்விச்சேவைகள் அமைச்சர் லயனல் ஜயதிலகாவும் பல தடவைகளில் குறுக்கிட்டார்கள்.

இலவச புத்தகம் எங்களுக்கு வேண்டாமென்று, கூட்டணி அறிக்கை விடலாமே என்று அமைச்சர் ஈ. எல். சேனநாயக்கா கூறவும், ''ஏன்'' என்று கேட்டார் அமிர்தலிங்கம்!

### 'புலி'க் குரல்கள்

'உங்களுக்கு எது தேவையானாலும் அதைச் செய்து தர நான் தயாராக இருக்கிறேன்'' என்று விவசாய அமைச்சரான ஈ. எல். ஒரு கட்டத்தில் கூறியவேளை அவர் 'யாழ்ப்பாணம்' உறுப்பினர் என்றபடியால்தான் அப்படிக் கூறுகிறீர்கள்!'' என்றார், விவசாய பகுதியான வவனியாவின் உறுப்பினர் தா. சிவசிதம்பரம்!

'புலி' என்று பின்னாலிருந்து சில குரல்கள் எழுந்தபோது அப்படி அழைப்பதையிட்டு நான் பெருமையடைகிறேன் என்ற யோகேஸ்வரன். 'நல்லெண்ணெய், மசால தோசை' என்று வேண்டுமானாலும் அழையுங்கள் அவை உங்கள் பண்பாடுகளைத்தான் வெளிப்படுத்தும் என்றார்!

'சுதந்திரக்கட்சியினரை விட 10 மடங்கு மோசமானவர்கள் நீங்கள்' என்றும் கூறினார் அவர்

தன்னுடைய அரசியல் மாணாக்கரின் சாதுரியத்தை பின்புறம்திரும்பி பார்வையிட்டபடி அகமகிழ்ந்துகொண்டிருந்தார் அமிர்தலிங்கம்!

தலைவர் அமிர்தலிங்கத்தின் ஆக்ரோஷமான பேச்சுடனேயே ஆரம்பித்த அன்றைய சபை நிகழ்ச்சிகள், சிஷ்யரான யாழ்பாணம் உறுப்பினரின் ஆக்ரோஷமான பேச்சினிடையேதான் ஒத்திவைக்கப்பட்டது.

மறுதினம் தனது பேச்சைத் தொடர்வதாகக் கூறி அமர்ந்தார், திரு.யோகேஸ்வரன்.

நானொரு நினைவஞ்சலி

அமரர்

வே. குமாரசா



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நினைவுதினம்

## அமரர் குமாரசாமி

...னயோ மனிதர்கள் ...ர்கள்; இறக்கிறார்கள். ...ிற்சிலர் புகழோடு ...விடுகிறார்கள். வினைப் ...செயற்கரிய செய்வதி ...ருக்குபகாரமாக வாழ் ...-புகழ்வலியவந்து சேர் ...றது. அதை நினைத் ...ங்களை ஆற்றுவது ...ாகும். பிறதலங் கரு ...களுக்காகவோ ஆற் ...வை மகான் நெஞ்சில் ...து. மக்களின்பம் தம ...எனக் கருதிச்செய்யுஞ் ...ால் நிலையான புகழ் ...ந்துசேரும். பெருமை ...ழ்வே சிறந்தது. அப் ...யாருந்தருவதன்று. ...க்கும், சிறுமைக்கும், ...வாழ்வே காரணம்,

...ச்சேரி திரு. வே. குமார ...னப்பய... அறிவாற் ...பேறுகள் பந்துறும் ...ான். ஆயினும் இறு ...ன்பதை அறியாதவர். ...தி-அறம் - சேவைக் ...பிறந்தவர். அவற்றை ...ஞ்சாமல் வளர்த் ...சவை இன்னும் மலர் ...மளிக்க அவருக்கோர் ...ர்ப்பம் கிடைத்தது. ...ண்டுகள் 1947-56. ...ந்தில் தென்மராட்சி- ...பள்ளி-கரைச்சிப் பகு ...பொன்மாரி பொழிந் ...ந்த பழமையைப் ...போன்முகில் வீர ...தான். மக்கள் தம்மை ...தெரிந்தனுப்பியதற்கு ...போதும் போதும் ...ழிந்தார். அட்டி

ஈழநாட்டில் வேறெங்குமே மழை-கனமழை பெய்ய வில்லை.

குறித்த பகுதிகளில் - ஒவ்வொரு சின்னஞ்சிறு கிராமங்களிலும்கூட -அவர்புரிந்த பணிகளை மக்கள் அன்றும், இன்றும் அனுபவித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

அரசியலில் - தேன்தமிழில் தெளிந்த அறிவுடையவர் குமாரன். திருக்குறள்பேசும் அரசியலை வியந்துவியந்து கூறுவார். ஒரு தமிழ்ப்பித்தன். நுட்பமான விவேகி. அதிகம் பேசார். பிறர்பேச இடம் கொடுப்பார். குறளில் அவர் தடவாத இடமில்லை. நாடு நாடு என்று கத்துவார். ஏழை நாட்டில் என்னகுறை என்று கேட்டால் நாட்டின் பசி-பிணி பகை இல்லையா என்று கேட்பார். வாட்டிவதைக்கும் பசியும், தீராப்பிணியும், பிறரால் வரும் பகையுமின்றி நம்நாடு இனிதுவாழவேண்டும் என்பார்.

இவ்வாறு அரசியல்-தமிழ்-சமயம்- விவசாயம் - சட்டத்துறைகளில் அவர்புரிந்த சாதனைகளை விரித்தால் பெருகும்.

மரணம் யாரை விட்டது?

அவரான்மா சாந்தியடைக.

திரு. வே. குமாரசாமியின் அழியாப்புகழுடம்பு வாழ்க

- மிருசுவில் 'ஞானம்'

## "உடைக்கும் நிலையிலிருந்த குளத்தைக் காப்பாற்றினர்"

(கிளிநொச்சி)

"இரணைமடுக்குளத்தின் பொறுப்பாளராகப் 10வருடங்கள் கடமையாற்றிய திரு. மகேசன் இக்குளத்தில் மிகப் பாரிய திட்டங்களை நிறைவேற்றி வைத்துள்ளார்.

இவ்வாறு கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு நா. குமாரசாமி, இரணைமடுக் குளத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. ச. மகேசன் ஓய்வு பெற்றதையொட்டி நடைபெற்ற பிரிவுபசார வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

1951ம் ஆண்டு தனது அரச சேவையை ஆரம்பித்த திரு. ச. மகேசன் இம்மாதம் ஓய்வு பெற்றார். அவரது சேவையைப் பாராட்டி கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்களத்தில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. குமாரசாமி தொடர்ந்து பேசுகையில் "வெள்ளப் பெருக்குக் காலங்களிலெல்லாம் இரவுபகல் பாராது சிறப்பாகச் சேவையாற்றி இரணைமடுக் குளத்தைக் காப்பாற்றினார்.

"இரணைமடுக்குளம் உடைக்கும் அபாய நிலையில் இருந்தபோது உடனடியாக அவசரக் கதவுகளைத் திறந்து குளத்தைக் கட்டுப்படுத்தினார்" என்றார்.

திரு. ச. மகேசன் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்துக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

இரணைமடுக் குளத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தொழிலாளர்களுக்குத் தேநீர் விருந்துபசாரமளித்துக் கௌரவித்தனர். (கு)

## பதிவாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிறப்பு இறப்பு பதிவாளராக செல்வி. இ. அன்னபூரணம் தற்காலிகமாக நியமனம் பெற்றுள்ளார்.

இவரது தந்தையான வைத்தியர் வரு. சு. இராசசேகரம் மரணமானதைத் தொடர்ந்து அவரது இடத்திற்கு செல்வி அன்னபூரணம் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

......

## 'கடையைத்திறந்து மக்களுக்கு உதவுக'

(மாவிட்டபுரம்)

பல நாட்களாகப் பூட்டப்பட்டுள்ள சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க 14வது கிளையை உடன் திறந்து மக்கள் கஷ்டத்தைப் போக்குமாறு யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டுள்ளது.

பைசூர்ப்பருப்பு கடத்தல், உரம்கிருமிநாசினிவிற்பனையில் கவனம் செலுத்தாமை, இருப்பு எடுப்பதற்கான உத்தரவைமறுத்தமை போன்ற பல நடவடிக்கைகள் தொடர்பாக மேற்படி கிளையின் முகாமையாளருக்கும் எதிராக கிளைக் குழுவினர் செய்து கொண்ட புகார்களையடுத்து மேற்படி கிளைச்சங்கத் தலைமைப் பீடத்தால் சீல் வைக்கப் பட்டு விசாரணை மேற் கொள்ளப் பட்டுள்ளது.

## யாழ். செயலக கலாச்சார மன்ற நடன விருந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கலாச்சார மன்றம் வழங்கும் நடனவிருந்து இம் மாதம் 15ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் கல்விப் பயிற்சிக் கலாசாலை மாணவிகள் செல்வி கிரிஜா சண்முகசுந்தரம் ஆகியோரின் நடன நிகழ்ச்சி இடம்பெறும்.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயகோன் பிரதம ஆசிரியராகக் கலந்து கொள்வார். (கு)

கிளை பூட்டப்பட்டிருப்பதால் மக்கள் படும் கஷ்டத்தைப் போக்க இக்கிளையின் உண்மையான இருப்பைப் பரிசீலனை செய்து இதனை இயங்க வைக்குமாறு கிளைக் குழுத்தலைவர். திரு. ச. முத்துலிங்கம் யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளரை கோரியுள்ளார்கள். இதன்பிரதி யாழ். அரச அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (அ)

## தொடர்ந்து தேடுகிறார்கள்




(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு மே மாதம் காணாமல் போன கொட்டடி சீனிவாசகம் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணராஜா மனோகரனை பொலிசார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

கடந்த மே மாதம் 8ம் திகதி அதிகாலை தேநீர் அருந்துவதற்காகச் சைக்கிளில் சென்றவர் காணாமல் போய் விட்டதாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிசார் தேடுதல் நடத்தியபோதும் அவர் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லையாம். (அ)


# அதி சக்தி மிகுந்த இரு சக்கர உழவு யந்திரங்கள் தற்பொழுது இலங்கை வந்துள்ளன

# 10 குதிரைப்பலமுள்ள "சக்தி"



இந்தியாவில் வெற்றியீட்டிய 10. கு. ப. 'சக்தி' இலங்கைப் பண்ணைகளிலும் தனது திறனை நிரூபித்துள்ளது. இவை மகா இலுப்பலமையில் உள்ள உழவு யந்திரப் பரீட்சை நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

தற்சமயம் பண்ணைகளிற் பாவனைக்குள்ள 5/6 கு. ப உழவு யந்திரங்களை விட 'சக்தி' பல நன்மைகள் கொண்டவையாகும்.

- கு. ப. வரிசையில் லாபகரமானது.
- விரைவான இயக்கத்தினால் நேரத்தை மிதமாக்குகிறது.
- ஏக்கர் அளவில் உழுவதிற் சிக்கனமானது.
- உலர்ந்த, கடின நிலத்திலும் திறம்பட இயங்குகிறது.
- ஈரலிப்பு, சதுப்பு வயல்களிலும் இலகுவிற் கையாளவல்லது.
- பாரிய சுமைக்கு விசாலித்த இடமும், ஏற்றி இறக்க ஏற்ற விரைவும் பூண்டவை (2 தொன்)
- குறைந்த பராமரிப்புத் தொல்லைகள் உடையவை

யப்பானிய 'மிற்சுபிஷி' கெவி இண்டஸ்ரீஸ் கூட்டுத் தயாரிப்பிலானவை

## 'சக்தி'- சக்தி மிகு இரு-சக்கர உழவு யந்திரம்.

விற்பனை, பராமரிப்பு, உதிரிப்பாகங்களுக்கு தொடர்பு கொள்க.

யுனைற்றட் ரேக்றேஸ் அன்ட் இக்குப்மென்ற் லிமிட்டெட்
447, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. தொலைபேசி: 95461-2.

MASTERS

திருச்செல்வம் அன் கொம்பனி
108, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நிலமகளை விளைச்சலினாற் பூரிக்கவைக்கும் சக்தி மிகு இரு சக்கர உழவு யந்திரத்தின் செயல் முறைகளை யாழ்ப்பாணக் கல்லூரியில் மார்ச் மாதம் 8-ம் திகதி வரை நடைபெறும் கைத்தொழிற் கண்காட்சியிற் கண்டு களிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவலைக் கைவிடப் போவதாக மாணவர் அறிவிப்பு:

# அமெரிக்க பணயக்கைதிகளை ஈரான்

# அரசு பொறுப்பேற்கும்

## சர்வதேச ஆணைக்குழு உறுப்பினர் பார்வையிடும் அறிகுறி

தெஹ்ரான், மார்ச் 7 அமெரிக்க பணயக் கைதிகளை பொறுப்பேற்பதென்று ஈரானிய புரட்சிச்சபை ஏகமனதாக முடிவுசெய்துள்ளது.

முன்னாள் ஈரானிய மன்னர் ஷாவை திருப்பியனுப்பவேண்டும் என்று கோரி தெஹ்ரானிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தைக் கைப்பற்றிய ஈரான் புரட்சி மாணவர்கள் அங்கிருந்த அதிகாரிகளைப் பணயம் வைத்தனர்.

கடந்த நான்கு மாதங்களாக அவ்வதிகாரிகளைப் பணயம் வைத்திருக்கும் மாணவர்கள் பயணக்கைதிகளை உடனடியாகப் பொறுப்பேற்குமாறு ஈரான் புரட்சிச்சபையைக் கேட்டுக்கொண்டனர். இதனையடுத்து கூடிய புரட்சிச் சபைஅதிகாரிகளைப் பொறுப்பேற்பதென்று தீர்மானித்துள்ளது.

இவ் விவகாரம் தொடர்பாக ஈரான் வெளியுறவு அமைச்சர் ஜனுப் ஷாவே கருத்துத் தெரிவிக்கையில் பணயக் கைதிகளின் காவல் பொறுப்பை விட்டுவிடப் போவதாக மாணவர்கள் கடிதம் எழுதியதைத்தொடர்ந்தே இம் முடிவு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறினார்.

பணயக் கைதிகளின் எதிர்காலம் பற்றி அரசாங்கம் முடிவுசெய்யும் என்றும் அமைச்சர் கூறினார்.

# ஜனதா கட்சி நெருக்கடி தீரும்

## சந்திரசேகர் நம்பிக்கை

புதுடில்லி, மார்ச் 7 ஜனதாக்கட்சியில் பெரும் நெருக்கடியாக இருந்துவரும் இரட்டை உறுப்பினர் பிரச்னை வெகுவிரைவில் தீர்ந்துவிடும் என்று ஜனதாக்கட்சித்தலைவர் திரு. சந்திரசேகர் கூறியுள்ளார்.

இப் பிரச்னையைத் தீர்க்க திரு. ராஜ்நாராயண் நல்ல யோசனை தெரிவித்திருப்பதாகவும் திரு. சந்திரசேகர் நேற்று நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

முன்னாள் துணைப் பிரதமர் திரு. ஜெகஜீவன்ராம் தமக்கு எழுதியுள்ள கடிதம் பற்றி அவர் குறிப்பிடுகையில் "மாறிவரும் நிலைமைக்கு ஏற்றபடி அவரது நிலையும் மாறும்" என்றார். (கு)

# றொடீஷிய அமைச்சரவை அமைப்பதில் தீவிரமுயற்சி

## இரு தேசாபிமானத் தலைவர்களும் ஆலோசனை

சாலிஸ்பரி, மார்ச் 7 றொடீஷியாவில் அமைக்கப்படவுள்ள கலப்பு அரசாங்கத்தின் அமைச்சரவையை அமைப்பதற்கு இரு கட்சித் தலைவர்களும் மிகத் தீவிரமாக ஆலோசனை நடத்திவருகின்றனர்.

தேசாபிமானத் தலைவர்களான திரு. றொபேர்ட் முகாபே, திரு. என்கோமா ஆகியோர் கலப்பு அரசு ஒன்றை அமைப்பதற்கு கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்தே இரு கட்சிகளையும் சேர்ந்த அமைச்சரவை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதேவேளையில் ஆபிரிக்க தேசிய முன்னணியின் தலைவர் திரு. முகாபே தமது கட்சிக் கூட்டத்தையும் தனியே தொடர்ந்து கூட்டி ஆலோசனை நடத்திவருகிறார்.

சுதந்திர சிம்பாப்வே றொடீஷியாவின் முதலாவது பிரதமராக தெரிவுசெய்யப்படவுள்ள திரு. முகாபேக்கு பல நாட்டுத் தலைவர்களும் பாராட்டுச் செய்திகளை அனுப்பிவருகின்றனர். இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தனக்கு அனுப்பிய பாராட்டுச் செய்தியே தனக்கு உற்சாகம் ஊட்டுவதாக இருக்கின்றது என்று திரு. முகாபே தெரிவித்துள்ளார்.

"வீழ்ச்சியடைந்த றொடீஷியப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு இந்தியா முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என்று திருமதி காந்தி எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது. (கு)

## ஐ. நா. கமிஷன் பார்வையிடும் அறிகுறி

இதேவேளையில் பயணக் கைதிகளைப் பார்வையிடும் வாய்ப்பு இல்லாததால் ஈரானிலிருந்து புறப்படுவதற்குத் தயாராக இருந்த ஐ நா. சபையின் சர்வதேச ஆணைக் குழு உறுப்பினர்கள் பணயக் கைதிகளை அரசு பொறுப்பேற்பதால் தமக்கு பார்வையிடச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அங்கேயே தங்கியிருக்கின்றனர். (கு)

# "ஏட்டுக்கல்வியால் பூரண அறிவைப் பெறமுடியாது"

(புலோலி)

"மாணவர்கள் பூரண அறிவைப் பெறும்போதுதான் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தலைமைத்துவத்தைக் கொண்ட நற்பிரஜைகளாக வாழ்ந்து நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு நாட்டைச் சுபீட்சப் பாதையில் இட்டுச் செல்லமுடியும். மாணவர்கள் தனியே ஏட்டுக் கல்வியின் மூலம் மாத்திரம் பூரண அறிவைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஏட்டுக் கல்வியுடன் செயன்முறைக் கல்வியும் ஒருங்கிணையும் போதுதான் அவர்களிடத்தில் சிந்தனைச்செறிவும், புது நம்பிக்கையும் வளர்ச்சியடைந்து பூரண அறிவு ஏற்பட முடியும்."

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்ற கல்விப் பொருட்காட்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. என். எஸ். சாமுவேல் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. என். துரைச்சாமி, சம்பிரதாய பூர்வமாக பொருட்காட்சியை ஆரம்பித்து வைத்தார். அதிபர் திரு. சாமுவேல் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"மாணவர்களின்நவீன விஞ்ஞான அறிவையும் கலைத்திறனையும், தொழில் நுட்ப ஆற்றலையும் செயல் திட்டக் கல்வி மூலமே வெளிப்படுத்த முடியும் எனவே தான் இது போன்ற செயல்முறைக் கல்விப் பொருட்காட்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியுள்ளது." (கு)

## பாகிஸ்தானுக்கு மிக அண்மையில்

# ஆப்கானில் கடும்சண்டை! சோவியத்படைக்கு சேதம்

இஸ்லாமாபாத், மார்ச் 7 பாகிஸ்தானுக்கு அண்மையிலுள்ள மாகாணமொன்றில் சோவியத் துருப்புக்களுக்கும் ஆப்கானிஸ்தான் புரட்சி இயக்கத்தினருக்கு மிடையில் கடும் சண்டை இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

பாகிஸ்தானுக்கு மிக அண்மையிலுள்ள ஹருனன் மாகாணத்திலேயே கடும் சண்டை இடம்பெறுவதாகவும் பல கட்டிடங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் பலர் படுகாயப்படுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

ஹருனன் மாகாணத்தின்ஒரு பகுதி சோவியத் துருப்புக்கள் வசமே இருக்கின்றபோதிலும் நடைபெற்ற சண்டைகளில் சோவியத் படைகளுக்கே பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதென்று ஆப்கான் இஸ்லாமிய முன்னணிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (கு)

## காசி-மாவை தம்பதிகளுக்கு வரவேற்பு

(மட்டக்களப்பு)

காசிஆனந்தன், மாவைசேனாதிராசா தம்பதிகளுக்கு இன்று மாலை மட்டக்களப்பு செல்வநாயகம் ஞாபகார்த்த மண்டபத்தில் வரவேற்புவசாரம் நடைபெறும். இவ் வரவேற்புபசாரத்தை அம்பாறை மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையினர் நடாத்துகின்றனர். (வெ)

## தி. மு. க. — இந்திரா காங்கிரஸ்

# வெற்றிபெற்ருல் கூட்டுமந்திரிசபை!

## கருணாநிதி தகவல்

(சென்னை)

தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ்-தி மு.க. கூட்டணி எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ருல் கூட்டு மந்திரிசபை அமைக்கப்படும்.

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி இத்தகவலை நேற்றுக் கோயம்புத்தூரில் தெரிவித்தார்.

இக்கூட்டணி அரசு ஏற்பட்டால் அது தமிழ்நாட்டின் நல்வாழ்வுக்கு வழிகோலுமென்று திரு. கருணாநிதி குறிப்பிட்டார்.

மாநில சுயாட்சிக்கோரிக்கை போன்ற தி.மு.கழக கொள்கையை இக்கூட்டணி பாதிக்காதென்று அவர் சொன்னர்.

### அ. தி. மு. க. தேர்தற் குழு

அ. தி. மு. க. அடுத்த தேர்தல் தொடர்பாக தோழமைக் கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு செய்துகொள்ளும் நோக்குடன் 6 பேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளது.

திருவாளர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், இரா. நெடுஞ்செழியன், எஸ். இராமச்சந்திரன், ப. உ. சண்முகம் போன்றவர்கள் இதில் அங்கம் வகிக்கிருர்கள்.

# ஆசியாவில் ஆயுதம்குவிப்பு: இந்திய ராஷ்டிரபதி கவலை!

(புதுடில்லி)

ஆசியப் பிராந்தியத்தில் ஆயுதங்கள் தொடர்ந்து குவிக்கப்படுவதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து இந்திய ராஷ்டிரபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி கவலை தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு இந்திய வந்திருக்கும் நேபாளமன்னர் பிரேந்திராவுக்கும் மகாராணி ஐஸ்வரிய ராஜலக்ஷ்மிக்கும் ராஷ்[illegible] [illegible] தெரிவித்தார். இவ்விருந்து வைபவத்தில் பேசுகையிலே திரு. ரெட்டி மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சஞ்சீவரெட்டி தொடர்ந்து பேசுகையில், அமைதி நிலவிவந்த பகுதிகளில் இப்போது போர்க்குமுறல் தோன்றியுள்ளது. எந்த நாட்டு விவகாரத்திலும் தலையிட பாரதம் தயாராக இல்லை என்றார்.

நேபாளமன்னர் பிரேந்திரா தமக்களிக்கப்பட்ட விருந்துபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் "தாயகத்திலோ பிராந்தியத்திலோ அமைதியின்மை நிலவுமானல் எந்தவொரு நாடும் பொருளாதாரத்துறையில் கவனம் செலுத்த முடியாது" என்றார்.

## பனம்பொருள் உற்பத்தி நிலையம்

(வண்ணார்பண்ணை)

பண்டைதீவு, அல்லைப்பிட்டி கிராமங்களில் உள்ள பனை மரங்களின் மூல வளங்களைப் பயன்படுத்தும் வகையில் மண்டைதீவுக் கிராமத்தில் பனம் பொருள் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு பிராந்திய அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கைஎடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
ஜெமினி - சரோஜாதேவி
ஆடிப்பெருக்கு

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
டி. ஆர். மகாலிங்கம்
அஞ்சலிதேவி
ஆடவந்த தெய்வம்
(புத்தம் புதிய பிரதி)

வின்ஸர் 2வது ஜனத்திரள் வாரம்!
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9
நாகேஷ்–முத்துராமன்–சௌகார் ஜானகி
"எதிர் நீச்சல்" (புதிய பிரதி)
குறிப்பிட்ட தினங்கள் மட்டும்

REGAL JAFFNA. சில தினங்கள் மட்டும்
Phone: 360
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
"THE FLESH AND BLOOD SHOW"
(கண்டிப்பாக வயது வந்தவர் மட்டும்)
STRICTLY FOR ADULTS

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சஞ்சீர் (ஹிந்தி) SANJEER

லிடோ தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-30
(யாழ்.நகர்) போன்: 7093
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
கணவன்

SRIDHAR JAFFNA
Daily 5 Shows—10-30 a.m. 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
GANG WAR, AMBUSH, BEATINGS AND MURDER
The Crime War To End ALL Crime Wars
ANTHONY QUINN in
THE DON IS DEAD
(Adults Only)
(திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த படம்)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-சந்திரமோஹன்
கவிதா நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன்ட் கலர்)

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி: 4 காட்சிகள்
சிவாஜி ... பத்மினி
அன்புக்கரங்கள்

SANTHI JAFFNA Phone: 7642
DAILY 10-30, a.m 2-30, 4-45, 7-00 & 9-30 P.M.
A Hilarious Action Comedy
Treat For The Entire Family...
Exciting...Fantastic...Thrilling...Enjoyable
Much Better than 'CRIME BUSTERS'
BUD SPENCER...TERENCE HILL
WATCH OUT WE'RE MAD!-COLOR

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்–சரோஜாதேவி–எம்.ஆர். ராதா
பாலாஜி–ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி


# இன்றைய பலன்

**மாசி மாதம் 25ம் திகதி 8-3-1980 சனிக்கிழமை**

மேடம்: ஏமாற்றம் தாக்கும், உங்களை வீழ்த்துவதற்கு சிலர் திட்டம் போடுவர், எந்தச் சந்தர்ப்பத்திலும் விழிப்புணர்ச்சி நன்று.

இடபம்: கண்ணியமான காரியங்களில் ஈடுபடுவீர்கள், செல்வாக்குப் பெருகும், காதல் சிட்டுகளுக்கு இன்று தேன் சொட்டும் தினம்.

மிதுனம்: எதிலும் தடுமாற்றம் தென்படும், வியாபாரிகள் நஷ்டமடைவர், வீட்டிலும் விழிப்புத் தன்மை வேண்டும்.

கடகம்: எண்ணியது நடக்கும், முன்னேற வழியுண்டு, முதியவர் ஆதரவுமுண்டு, படும்ப சுகமும் உண்டு.

சிங்கம்: மனைச் சிறப்புண்டு, மக்களால் மகிழ்ச்சியுமுண்டு, இடப்பிரிவுமுண்டு, கடமையிலும் கண்ணியம் நன்று.

கன்னி: உயர்வுக்கு வழி காண்பீர்கள், உயர்ந்த எண்ணங்கள் தலை தூக்கலாம், புதிய தொழிலிலும் ஆர்வம் பிறக்கும்.

துலாம்: கருத்து வேற்றுமைக்கிடமுண்டு, உடல்நலக் குறைவுமுண்டு, பொருள்விரயத்திற்குமிடமுண்டு, இறை வழிபாடு நன்று.

விருச்சிகம்: இன்னலின்பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும், பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும், இல்லத்திலும் அதிருப்தி நிலவும்.

தனுசு: எண்ணம்போல் வாழ்வு இன்று மலரும், களஸ்திரப் பேச்சும் சிலர் வாழ்வில் இடம்பெறலாம், நன்மையான தினம்.

மகரம்; ஆசையலைகளால் அவதிப்படுவீர்கள், ஆழ்ந்த சிந்தனையைத் தவிர்க்கவும், காரியத்தில் விழிப்புணர்ச்சி நன்று.

கும்பம்: மாதுரு சுகமுமுண்டு, பொன்னுன வாழ்வுமுண்டு. வியாபார விருத்தியுண்டு. சிறப்பான தினம்.

மீனம்: புத்திர விருத்தியுண்டு. புண்ணிய யாத்திரை மேற்படலாம், கடமையும் சிறக்கும், கண்ணியமும் பிறக்கும்.

சோதிடக்கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

# இ.தொ.கழக பொதுச்செயலாளர் மரணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தொழிலாளர் கழகத் பொதுச் செயலாளரும் தமிழரசுக்கட்சி தமிழர் விடுதலைக்கூட்டணிப் பொது சபை உறுப்பினருமான. கொ. காத்தினம் நேற்று முன்தினம் ஹட்டனில் காலமானார்.

அன்னாரது மறைவையொட்டி யாழ்.கூட்டணிக் காரியாலயத்தில் பறந்து கொண்டிருந்தகட்சியின்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

கூட்டணி எம் பி'க்கள். தலைவர்கள் ஹட்டனில் நடைபெற்ற இறுதிச்சடங்கில் கலந்து கொண்டனர்.

யாழ்.மேயரும் அனுதாபம் தெரிவித்துத் தந்திஅனுப்பியுள்ளார் (கொ)


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஸ்ரீகாந்த்-ஜெய்சித்ரா
பயணம்


# "விளையாட்டுப்போட்டிகள் வெற்றி தோல்விக்கு மட்டுமல்ல"

**- யாழ். பொலிஸ் அதிபர்**

(மாவிட்டபுரம்)

"விளையாட்டுப் போட்டிகள் வெற்றி, தோல்விக்காக மட்டும் நடத்தப்படுவதில்லை. அவற்றின் மூலம் ஒரு குறிக்கோளுடன் வாழக்கூடிய மனோபக்குவம், ஒழுக்கம், கட்டுப்பாடு என்பனவும் ஏற்பட வழி உண்டு."

இவ்வாறு வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வருடாந்த விளையாட்டு விழாவின் பரிசளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டுபேசிய யாழ்.பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லிவிக்கிரமசூரியா கூறினார்.

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா தலைமையில் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை மைதானத்தில் நடந்த இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

"இளைஞர்களிடையே அதிகளவு சக்தி உண்டு அதனை விளையாட்டுத்துறையில் அவர்கள் செலுத்த வேண்டும். விளையாட்டுத்துறையில் ஈடுபடுவதால் குற்றச்செயல்களில் ஈடுபட அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காது போய்விடும். தீய வழிகளில் செல்லாது விளையாட்டில் அதிக அக்கறை காட்ட இளைஞர்கள் முன் வந்தால் அவர்களது வாழ்வு வளம் பெறுவதுடன் நாடும் பயனடையும். குற்றச் செயல்களும் குறைய முடியும்"

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரி திரு. முருகையா உட்பட மற்றும் பலர் பேசினர். (கு)

# நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு/13842

1. காலஞ்சென்ற செல்வலக்ஷ்மி ஆ. சோமசுந்தரத்தின் கைம்பெண்ணின்
2. சட்டபூர்வமான தத்துவகாரராகிய சுப்பிரமணியம் காசிநாதனும்
3. இராசம்மாவும் எல்லோரும் காரைநகர் பேற்கு.

வாதிகள்

எதிராக

1. இராசரட்ணம் சுந்தரமூர்த்தியும்
2. அவரின் மனைவி கமலாம்பாள் இருவரும், 76, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பிரதிவாதிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/13842-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளும் கடைக் கட்டிடங்களும் 1980-ம் ஆண்டு பங்குனி மாதம் 25-ந் திகதி 25-3-80) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள். நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த 1-ம், 2-ம் வாதிகட்கு முதலும் வட்டியும் ரூபா 64843-76 சதமும் பேற் கொண்டு ரூபா 50,000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 15% வட்டி வீதம் 23-5-73லிருந்து 7-1-75 வரைக்கும் அதன் பின் இறுக்கும் வரைக்கும் முழுத்தொகைக்கும் வருடமொன்றுக்கு 5% வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 833-96 சதமும் கொடுத்தல் வேண்டும். இதில் தீர்வையால் 2-8-76ல் ரூபா 5000 -உம் செலவு முழுவதும் கொடுப்பட்டுள்ளது. மேலும் 27-8-776ல் ரூபா 10000/-ம் மேலும் 2-7-79ல் ரூபா 10,000/-ம் மேலும் 20- 1-79ல் ரூபா 25,000/-ம், மேலும 18-12-79ல் ரூபா 30,000/-ம் மேலும் 20-12-79ல் ரூபா 9000 -ம் கழித்து மீதி அறவிடப்பட வேண்டும்.

## குறித்த ஆதனடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மேற்கு வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணையிலுள்ள "மூத்தையினர்" வளவு கந்தையிட்டித்தடல், சீமாந்திடல், திருவளர்திடல் என்றழைக்கப்படும் 26 பரப்பு 10 குளி கொண்ட நெற்காணியில் 5 பரப்பு நெற்காணியும் 76 B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கடைககட்டிடமும் சேர்த்து விற்கப்படும். இக்காணி T கந்தையா உத்தரவு பெற்ற உலாந்தா வினல் 8-5-71ல் தயாரிக்கப்பட்ட 5005-ம் இலக்கப் படத்தில் காட்டப்பட்டுள்ளது இக்காணியின் கிழக்கும், தெற்கும் இராசரத்தினம் சுந்தரமூர்த்தியும் அவர் மனைவி கமலாம்பாளுடையதும் மேற்கு இராசரத்தினம் சுந்தரமூர்த்தியும் அவர் மனைவி கமலாம்பாள் வேறு ஒருவருடையதும் வடக்கு வீதியும் கொண்டுள்ளது. இக்காணியின் மேற்குப் பக்கத்தால் ஒழுங்கையாகப் பாவிக்கும் உரிமையும்கொண்டுள்ளது. இது யாழ்ப்பாணத்தில் D 378/153 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

2. "மூந்தையனர்"வளவு கந்தையிட்டித்திடல்,சீமாந்திடல், திருவளர்திடல்" என்றழைக்கப்படும் 26பரப்பு 10 குளி கொண்ட நெற்காணியில் ஒரு பரப்பு நெற்காணியும் 76, A, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள கடைக்கட்டிடமும் சேர்த்து விற்கப்படும். இக்காணி உத்தரவு பெற்ற உலாந்தா T கந்தையா அவர்களால் 26-2-71ல் தயாரிக்கப்பட்ட 4837 A இலக்கப் படத்தில் 1-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. வண்ணார்பண்ணை தென்மேற்கிலுள்ள இக்காணியின் கிழக்கு, தெற்கு, மேற்கு இராஜரத்தினம் சுந்தரமூர்த்தியினதும் அவர் மனைவி கமலாம்பாளுடை ஆதனம், வடக்கு வீதியாகவும் அமைந்துள்ளது. இது யாழ்ப்பாணத்தில் D 377/162 ஆகப் பதியப்பட்டுள்ளது.

**சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.,**
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்.

"வடிவேல் உதயம்",
காங்கேசன் துறை வீதி,
கோண்டாவில்,
25-1-80.

5170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...

டில்கா வாச் வேக்ஸ்
. பஸ் நிலைய எதிர் மேல்மாடி .
404/1. ஆஸ்பத்திரி வீதி . யாழ்ப்பாணம்.



ஈழநாடு The EELANAADU 50 சதம்


## 'யோகேஸ்' அழைப்பு

(யாழ்ப்பாணம்)
கொழும்பு—யாழ். 2-வது இரவு ரயிலைச் சேவைக்கு விடு வதற்குப் போதிய ரயில் சாரதிகள் இல்லை என ரயில்வே இலாகா கூறுகிறது. எனவே மீண்டும் சேவை செய்ய விரும்பும் ஓய்வு பெற்ற என்ஜின் சாரதிகள் உடன் தம்மைச் சந்திக்குமாறு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் கேட்டுள்ளார். (ம-)



தேன் சிந்தும் ஐஸ்கிறீம்! மற்றும் விதவிதமான பமிலி புளொக் ஐஸ்கிறீம் வகைகளுக்கும்..
நிக்கோ சுவீற்ஸ் கிறீம் ஹவுஸ்
யாழ்ப்பாணம். போன்: 464, 7889
நிக்கோவுக்கு வேறு கிளை இல்லை


## "பனையே மீண்டும் நமக்கு கைகொடுக்க வேண்டும்"

---யாழ், அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்டம், பனை மரத்தை தனது ஒப்பற்ற செல்வமாக கொண்டு விளங்குகிறது. கற்பகதருவுக்கு நிகரான இப்பனையையும், பனம் பொருள்களையும் அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு பனம்பொருள் அபிவிருத்தி சபை அமைக்கப்பட்டது. இதன் பயனாக பனை மர வளர்ப்பிலும் பனம் பொருள் அபிவிருத்தியிலும் அண்மைக்காலத்தில் மிகச் சிறப்பான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அதுவும் தலைநகரமாகிய கொழும்புக்கு வெளியே அமைக்கப்பட்ட தலைமைச் சபை என்ற பெருமையையும் இப்பனம்பொருள் அபிவிருத்தி சபை பெற்றுள்ளது"

இவ்வாறு யாழ் மின்சார நிலைய வீதியில் பனம்பொருள் அபிவிருத்திசபையின் விற்பனை நிலையத்தை யாழ் அரசாங்க அதிபர் திரு, யோகேந்திரா துரைசுவாமி நேற்றுக்காலை திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"நமது முன்னோர் பனையிலிருந்து லகிதமான பிரயோசனங்களைப் பெற்றுப் பயன் அடைந்தார்கள். ஆனால் எல்லா நன்மைகளையும் தருகின்ற பனைமரத்தின் பயனை இக்காலத்தில் பெற்றுக் கொள்ள நாம் தவறிவிட்டோம். பொருளாதார நெருக்கடி நிலவுகின்ற இக்காலத்திலே இந்த நிலைமை எவ்வளவு தவறானது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். உலக சந்தையில் சீனியின் விலை உயர்ந்து கொண்டே போகின்றது.

இதற்காகப் பெருந்தொகையான அந்நிய செலாவணி செலவாகிறது, இந்த நிலைமையில் நமக்குப் பனையே மீண்டும் கைகொடுக்கவேண்டியுள்ளது.

"பனையின் பிரயோசனத்திலிருந்து ஏராளமான பொருட்களைச் செய்யமுடியும் என்பதை இந்தச் சபையினர் நடத்திய கண்காட்சிமூலம் நாங்கள் அறிந்துகொண்டுள்ளோம். இத்தகைய பொருட்களை விலைகொடுத்து வாங்கி உற்பத்திசெய்யும்இளைஞர்களையும் யுவதிகளையும் பாராட்டி உற்சாகப்படுத்த வேண்டும். இதன்மூலமே தொழில் வளர்ச்சியடைந்து, நமது பிரதேசம் பொருளாதார அபிவிருத்தி அடைய முடியும். இந்தப் புதிய நிறுவனம் இதற்காகவே ஆரம்பித்து வைக்கப்படுகிறது. இது பெரும் லாபம் பெற்று மேலும் பல நிறுவனங்களை உருவாக்க வேண்டும்.

இச்சபையின் தலைவர் திரு. கனகசூரியரின் முயற்சிகள் பாராட்டற்குரியன.

## ஜெகஜீவன் ராஜினமா

புதுடில்லி, மார்ச் 7
ஜனதா கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் முன்னாள் துணைப் பிரதமருமான திரு. ஜெகஜீவன்ராம் ஜனதா கட்சியிலிருந்தும் ராஜினமா செய்துள்ளார்.

புதுடில்லியிலுள்ள தனது இல்லத்தில் நடத்திய நிருபர்கள் மகாநாட்டிலேயே திரு. ராம் மேற்கண்ட தனது ராஜினமாச் செய்திபற்றி அறிவித்தார்.

## கச்சதீவில் .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
கர்கள் குறைவென்றும், இலங்கை யாத்திரிகர்களே அதிகம் என்றும் கூறிய அவர்கள், தாங்கள் கொண்டு போனபொருட்களைக் கொடுக்க முடியாததினால் திருப்பிக்கொண்டு வந்ததாகவும் தெரிவித்தனர்.

நேற்று நண்பகல் 12 மணிக்கு கச்சதீவிலிருந்து ஒருபடகு ளில் யாத்திரிகர்கள் திரும்பினர். இவர்களில் சில பெண்களும் காணப்பட்டனர்.

கச்சதீவு புறப்படவிருந்த சில 'திடீர்' யாத்திரிகர்கள், கச்சதீவிலிருந்து திரும்பிய யாத்திரிகர்களிடமிருந்து தேங்காய் எண்ணை டின்களையும், பார் சோப்புகளையும் வாங்கி, மீண்டும் கச்சதீவுக்குக் கொண்டு சென்றனர்.

சில பெட்டிகளில் கூறைச் சேலைகள், காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், சாரங்கள், போர்வைகள், பெட்சீட்டுகள் காணப்பட்டன. (இ)

## மாணவருக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)
கேகாலையிலிருந்து நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு கடந்த இரவு யாழ். வந்த 500 மாணவர்களும், 200 ஆசிரியர்களும் யாழ். ரயில் நிலையத்தில் அன்புடன் வரவேற்கப்பட்டனர். (கொ-இ)

## இன்று யாழ். வரும் அமைச்சர் கோஷ்டி

(யாழ்ப்பாணம்)
கல்வி இளைஞர் விவகார அலுவல்கள் அமைச்சர் திரு. ரணில் விக்கிரம சிங்கா நீதி அமைச்சர் கலாநிதி நிஸங்கா விஜேரத்தின கேகாலை மாவட்ட அமைச்சர் திரு. செனிவரத்தின யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் ஆகியோரும் மற்றும் சில தென்பகுதி எம்பிக்களும் இன்று யாழ்ப்பாணத்திற்கு நல்லெண்ணவிஜயத்தை மேற்கொள்கின்றனர்.

அமைச்சர்களுக்கு இன்று மாலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மகத்தான வரவேற்பளிக்கப்படவுள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்ட கேகாலை மாவட்ட மாணவர்கள் 500 பேரும் 200 ஆசிரியர்களும் இந்த வரவேற்பில் கலந்து கொள்வர். (கொ-இ)



இல்லத்தரசிகளே..!
உங்களுக்குத் தேவையான
கென்வூட்
மின்சார குக்கர்கள்
குளிர்சாதனப்பெட்டிகள்
குளிரூட்டும் சாதனங்கள்
தரைமினுக்கிகள்
யாவற்றிற்கும்
வட இலங்கையின்
ஏகவினியோகஸ்தர்கள்,
எஸ். சின்னத்துரை & பிரதர்ஸ்
39 கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 284
காந்தி..கல்கி



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச்மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office ... under No. QD/89/48/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org